# தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டு மையம்

1. பெரியார் பல்கலைக்கழக இணைவு பெற்ற என்பது (80) கல்லூரிகளில் இருந்து தொழில் முனைவில் ஈடுபட விருப்பமான மாணவ-மாணவிகள் தேர்வு செய்யப்பட்டு, பெரியார் தொழில் முனைவோர் மையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அதன் அடிப்படையில் கடந்த 14.03.2013 மற்றும் 15.03.2013ல் பெரியார் பல்கலைக்கழக தொழில் முனைவு மேம்பாட்டு மையத்தில், தொழில் முனைவு ஒருங்கிணைப்பாளர்களுக்கு (EDP Co-ordinator) இரண்டு நாட்கள் **விழிப்புணர்வு மற்றும் பயிற்சி பட்டரை** நடைபெற்றன. அது சமயம் தொழில் முனைவு மேம்பாட்டு **இயக்குனர்** சென்னை அவர்கள் தலைமையிலும், பல்கலைக்கழக **துணைவேந்தர்** அவர்கள் முன்னிலையில், தொழில் முனைவு மேம்பாட்டு உறுப்பினர்-செயலர் மற்றும் நான்கு மாவட்டதில் உள்ள மாவட்ட தொழில் மையம், தொழில் முனைவு வல்லுனர்கள் மற்றும் இதர நிபுணர்கள், பேராசிரியர்கள் கலந்துகொண்டு தொழில் முனைவு பிரிவு ஒருங்கிணைப்பாளர்களுக்கு பயிற்சி அளித்தனர். இந்த இரண்டு நாட்கள் பயிற்சி பட்டரையில் பெரியார் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்ற ஒவ்வொரு கல்லூரிகளில் இருந்தும் இரண்டு பேராசிரியர்கள் மற்றும் துறை சார்ந்த நபர்களும் கலந்துகொண்டு நிகழ்ச்சிகளை சிறப்பித்தனர்.

2. இதனை தொடர்ந்து **துணைவேந்தர்** மற்றும் **பதிவாளர்** அவர்களின் ஒப்புதலோடு பெரியார் பல்கலைக்கழக இணைவு பெற்ற ஒவ்வொரு கல்லூரிகளிலும் ஒரு EDP Unit துவங்க (Seed Capital) விதை மூலதனமாக ரூபாய் 10,000/- வீதம் 80 கல்லூரிகளிலும் ரூபாய் 8,00,000/- கனரா வங்கி வரைவோலை மூலம் (DD) ஒவ்வொரு கல்லூரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுள்ளது. அதன் மூலம் மாணவ-மாணவகளுக்கு தொழில் முனைவு சம்மந்தப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

3. ஒருங்கிணைப்பாளர் பயிற்சி (Orientation) முடிந்த பிறகு பெரியார் பல்கலைக்கழக தொழில் முனைவோர் மையம் சார்பாக ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள கல்லூரிகளில் பயிலும் மாணவ-மாணவிகளுக்கு தொழில் முனைவு சம்மந்தப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அதன்படி, கடந்த 08.04.2013 மற்றும் 09.04.2013 ஆகிய இரண்டு நாட்களிலும் **சேலம் மாவட்ட** கல்லூரிகளில் பயிலும் மாணவ-மாணவிகளுக்கு **பெரியார் பல்கலைக்கழகத்தில்** இரண்டு நாட்கள் பயிற்சி முகாம் நடைபெற்றது. ஒவ்வொரு கல்லூரிகளில் இருந்தும் 10 மாணவர்கள் வீதம் 30 கல்லூரிகளில் இருந்து சுமார் 300 மாணவ-மாணவிகள் கலந்துகொண்டனர்.

அவர்களுக்கு தொழில் முனைவு பற்றிய புத்தகம், குறிப்பேடு மற்றும் இதர பொருட்கள் வழங்கப்பட்டு மாணவ-மாணவிகளை ஊக்குவிக்கப்பட்டனர்.

4. கடந்த 10.04.2013ல் **நாமக்கல் மாவட்டத்தில்** உள்ள கல்லூரியில் பயிலும் மாணவ-மாணவிகளுக்கு தொழில் முனைவு பற்றிய வழிப்புணர்வு முகாம் மற்றும் பயிற்சி பட்டரை, **மோகனூர் சுப்பிரமணியம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில்** நடைபெற்றது. அது சமயம் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கல்லூரியில் பயிலும் மாணவ-மாணவிகள் கலந்துகொண்டனர். இதில் மாவட்டத்தில் உள்ள பல்வேறு தொழில் முனைவு வல்லுனர்கள் கலந்துகொண்டு தொழில் முனைவு பற்றிய பயிற்சியினை அளித்தனர்.

5. கடந்த 11.04.2013ல் **தருமபுரி** மற்றும் **கிருஷ்ணகிரி மாவட்டத்தில்** உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவ-மாணவிகளுக்கு தொழில் முனைவு பற்றிய பயிற்சியினை **ஊத்தங்கரை வித்யா மந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி**, கட்டேரியில் நடைபெற்றது. அது சமயம் இந்த இரண்டு மாவட்டத்தில் உள்ள கல்லூரிகளில் இருந்து ஏராளமான மாணவ-மாணவிகள் கலந்துகொண்டு தொழில் முனைவு பற்றிய பயிற்சியினை பெற்றார்கள்.

6. பெரியார் பல்கலைக்கழக கோடை விடுமுறைக்கு பிறகு கடந்த 13.07.13 அன்று பெரியார் பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளின் தொழில் முனைவு ஒருங்கிணைப்பாளர்கள் மறு ஆய்வு (EDP Co-ordinator Review) கூட்டம் நடைபெற்றது. ஆதனை தொடர்ந்து இணைவு பெற்ற 80 கல்லூரிகளில் பயிலும் மாணவ-மாணவிகளுக்கும், தொழில் முனைவு மேம்பாடு பற்றிய மறு ஆய்வு மற்றும் பயிற்சி கூட்டம் 15.07.13 முதல் 22.07.13 வரை நடைபெற்றது. இதில் பல்வேறு தொழில் முனைவு வல்லுனர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்துகொண்டு மாணவ-மாணவிகளுக்கு தொழில் முனைவு பற்றிய பயிற்சியினை வழங்கினார்கள்.

7. பெரியார் பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளின் தொழில் முனைவு ஒருங்கிணைப்பாளர்களுக்கு, தொழில் முனைவு மேம்பாடு பற்றிய இறுதி ஆய்வு கூட்டம் 07.01.2014 அன்று நடைபெற்றது.

8. பெரியார் பல்கலைக்கழக தொழில் முனைவோர் மையம் சார்பாக ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள கல்லூரிகளில் பயிலும் மாணவ-மாணவிகளுக்கு தொழில் முனைவு பற்றிய இறுதி ஆய்வு கூட்டம் 08.01.2014 மற்றும் 09.01.2014 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது.

மேற்கண்ட பயிற்சிகளுக்கு வரும் தொழில் முனைவு ஒருங்கிணைப்பாளர்களுக்கும், மாணவ-மாணவிகளுக்கும் தொழில் முனைவு பற்றிய புத்தகம் பெரியார் தொழில் முனைவு மேம்பாடு மையம் சார்பாக தயாரிக்கப்பட்டு, அச்சடிக்கப்பட்டு Volume-I ஒருங்கிணைப்பாளர்களுக்கும், Volume-II மாணவ-மாணவிகளுக்கும் வழங்கப்பட்டன.

இது தவிர மாணவ-மாணவியர்களுக்கு தேவையான குறிப்பு புத்தகம், பேனா, பேக் பைல் போன்றவைகளை வழங்கி மாணவ-மாணவிகள் தொழில் முனைவு பற்றிய கல்வியினை பெறும் பொருட்டு ஊக்கிவிக்கப்பட்டனர்.